2025 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார், மாண்புமிகு வனம் மற்றும் காதித் துறை அமைச்சர் அவர்கள்.*

133—

வனவிலங்கு பாதுகாப்பு மையம்

***78476—திரு. ச. சிவகுமார்:**

மாண்புமிகு வனம் மற்றும் காதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, மயிலம் கிராமத்தில் வன விலங்கு பாதுகாப்பு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, வனம் மற்றும் காதித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டத்தில், 24,876 ஹெக்டேர் வனப் பரப்பும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 82,241 ஹெக்டேர் வனப் பரப்பும் உள்ளன. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மயிலம் தொகுதி, திண்டிவனம் வனச் சரகத்தில் அமைந்துள்ளது. மயிலம் தொகுதியில் வன விலங்குகள் நடமாட்டம் மிகக் குறைவாக உள்ளது. காட்டுப் பன்றிகள், குரங்குகள் ஆகிய விலங்குகள் மட்டுமே இங்கு காணப்படுகின்றன. எனவே, மயிலம் பகுதியில் வன விலங்குகள் பாதுகாப்பு மையம் தொடங்குவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. விழுப்புரம் வனக் கோட்டத்திற்குட்பட்ட திண்டிவனம் வனச் சரகத்தில் ஊசுடு ஏரி பறவைகள் சரணாலயம் ஏற்கெனவே செயல்பட்டு வந்தது. கழுவேலி பறவைகள் சரணாலயம் 2021 ஆம் ஆண்டில், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. மரக்காணம் பகுதியில் Ornithological Conservation Centre *என்ற மையம் சுமார் 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும்*

[*2025 ஏப்ரல் 1*

மரக்காணம் பகுதியில், சுமார் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் புதிய பன்னாட்டுப் பறவைகள் மையம் அமைப்பதற்கு ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, மயிலம் பகுதியில் வன விலங்கு பாதுகாப்பு மையம் அமைக்க வேண்டிய தேவை தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.*

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மயிலம் தொகுதியிலுள்ள வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் மரக் கன்றுகளை நட்டுப் பாதுகாக்க வேண்டும். அதேபோன்று மரக்காணம் ஒன்றியம் நடுக்குப்பத்திலிருந்து, வண்டிப்பாளையம், செட்டிக்குப்பம், தேவிகுளம், K.N. பாளையம், திருக்கனூர், புதுப்பாக்கம், அனுமந்தை வழியாக சுமார் 30-க்கும் மேற்பட்ட கிராமங்களின் பொதுமக்கள் மருத்துவ சிகிச்சைக்காக பக்கிங்காம் கால்வாய் வழியாக அருகே உள்ள பாண்டிச்சேரி மருத்துவமனைக்குச் சென்று வருகிறார்கள். மழைக்காலத்தில் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுவதால், பக்கிங்காம் கால்வாயில் சாலைகள் துண்டிக்கப்படுகின்றன. ஆகவே, வனத் துறைக்குச் சொந்தமான பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக கழுவேலி பகுதியில் ஓர் உயர்மட்டப் பாலம் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனம் மற்றும் காதித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலம் பகுதியில் அதிக அளவிலான வன விலங்குகளும் கிடையாது; வனப் பகுதியும் கிடையாது என நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். அதிலும் குறிப்பாக, மரக்காணம் பகுதியில் சுமார் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் புதிய பன்னாட்டுப் பறவைகள் மையம் உருவாக்கப்படுகிறது. மயிலம் பகுதிக்கு அருகில்தான்*

2025 ஏப்ரல் 1]

மரக்காணம் பகுதி உள்ளது. பறவைகள் சரணாலயம் அமைக்க 2021 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான் அறிவிக்கை செய்து, 5,151.6 ஹெக்டேர் பரப்பளவில் கழுவேலி பறவைகள் சரணாலயத்தையும் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, பறவைகளைப் பொறுத்தவரையில், இதுபோன்ற மையங்கள் அங்கு உருவாக்கப்பட்டு வருகின்றன. விழுப்புரம் மாவட்டத்தில் 5 மரகதப் பூஞ்சோலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த 5 மரகதப் பூஞ்சோலைகளும் விழுப்புரம் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. கழுவேலி பறவைகள் சரணாலயம், 2024 ஆம் ஆண்டில் ராம்சார் தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இதுபோன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி இரண்டுமே ஒரே வனக் கோட்டத்தில் வருகின்றன. ஆகவேதான், கள்ளக்குறிச்சி மாவட்டத்திலும் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.*

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்ட அமைச்சராவார். ஆகவே, செஞ்சி ஒன்றியம், நெடுஞ்சாலை ஆலம்பூண்டி முதல் மழுவந்தாங்கல் செல்லும் சாலை, மலையரசங்குப்பம் காப்புக் காட்டில் 6 கி.மீ. அமைக்கப்படாமல், குண்டும் குழியுமாக உள்ளது. வனத் துறைக்குச் சொந்தமான இடமாக இருப்பதால், வாகன ஓட்டிகள் அடிக்கடி விபத்துக்குள்ளாகி, உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. எனவே, அச்சாலையை அமைப்பதற்கு வனத் துறையை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். காலநிலை மாற்றத்தின் அவசியம் கருதி, சென்னையில், 130 ஏக்கர் கொண்ட கோயம்பேடு பேருந்து நிலையத்தில் பசுமைப் பூங்கா அமைப்பதற்கு சென்னை மாநகராட்சிக்கும், CMDA-க்கும் வனத் துறை பரிந்துரை செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனம் மற்றும் காதித் துறை அமைச்சர் அவர்கள்.*

[*2025 ஏப்ரல் 1*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மயிலம் தொகுதி உறுப்பினராக இருந்தாலும், செஞ்சி தொகுதிக்கும் கேள்வி கேட்டிருக்கிறார்கள்; வரவேற்கிறேன். செஞ்சி பகுதியில் தற்சமயம் தாங்கள் கூறியதுபோன்று, மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சர் என்ற முறையில், அதைப்பற்றியும் எனக்கு நன்றாகத் தெரியும். அதனடிப்படையில்தான் வனத் துறையின் மூலமாக, கிட்டத்தட்ட 500 கி.மீ. நீளத்திற்கு 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைகளைச் சீரமைக்கின்ற பணியையும் இந்த அரசு முதலிலேயே அறிவித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற புதிய சாலைகள் வேண்டுமென்ற கோரிக்கைகளும், அவற்றிற்காக அரசு உரிய அனுமதியைப் பெற வேண்டுமென அதுகுறித்து நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதற்காக ஒன்றிய அரசிடம் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. அனுமதியைப் பெற்று அந்தப் பணிகளை உடனடியாக செய்வதற்கும், செஞ்சியில், செஞ்சி கோட்டை இருக்கிற காரணத்தினால், அதற்கான பணிகளையெல்லாம் விரைவில் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.*

முற்பகல் 9–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அன்னியூர் சிவா (எ) சிவசண்முகம் அவர்கள்.*

திரு. அ. அன்னியூர் சிவா (எ) சிவசண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தொகுதி திருக்கோவிலூர் தொகுதி. அதற்குப் பக்கத்தில் இருக்கின்ற விக்கிரவாண்டி தொகுதியில் உள்ள நல்லாபாளையம் கிராமத்திலிருந்து அடுக்கம் காப்புக்காடு வழியாக செல்லும் சாலை வனத் துறையின் சார்பாக சீர்செய்து தரப்படுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனம் மற்றும் காதித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொல்லிவிட்டேன். விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், என்னுடைய*

2025 ஏப்ரல் 1]

சொந்த மாவட்டம். கண்டிப்பாக அங்கேயிருக்கின்ற வனப் பகுதிகளில்-என்னுடைய தொகுதியிலும் இதுபோன்ற புதிய சாலைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் சில இடங்களில் இருக்கின்றன. இந்த அரசு இந்தப் புதிய சாலைகளை உருவாக்குவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்வதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். விவசாயிகள் மற்றும் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பாதிக்காதவகையில் சாலைகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதிலே வனத் துறை மிகக் கவனமாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

134—

சட்டக் கல்லூரி

***39003—திரு. ஆ.மு. முனிரத்தினம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிபாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி, சட்டத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிபாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் சட்டக் கல்லூரி துவங்க எந்தவிதமான செயற்குறிப்பும் கிடையாது. எனவே, அரசு முன்வராது.

(ஆ) கேள்வி எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம் அவர்கள்.*

திரு. ஆ.மு. முனிரத்தினம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதி, ராணிப்பேட்டை*